# திருக்குறள் படிப்பது எவ்வாறு

| முக்கிய தலைப்பு | துனை தலைப்பு \| அதிகாரம் |
|---|---|
| மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் | • கடவுள் வாழ்த்து<br>• இறைவன், தெய்வம், தெண்புலத்தார், தாமாரைக் கண்ணான் ,என இறைவன் சார்ந்த பொருள் தரக்கூடிய குறள்களை பொருளோடு சேர்த்துப் படித்தல்<br>• ஏதேனும் சமயம் சார்ந்த கருத்துகள் இருக்குமானால் அவற்றின் சரியான பொருளை உள்வாங்கிப் படித்தல் ( உதாரணமாக , மழித்தலும் நீட்டலும், துறவு போன்றவை சமண மதக் கருத்துக்களைச் சார்ந்திருக்கும் ஆனால் திருக்குறளில் வேறு இடங்களில் இக்கருத்துக்கள் வேறு ஒரு பொருளோடு முரண்படும் இவ்வாறு பொருத்திப் பார்த்து படிக்க வேண்டும் |
| அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை | • அறிவியல் கருத்துக்கள், அறிவுடமை, கல்லாமை, கள்ளுண்ணான்மை, புலால் மறுத்தல், தீ நட்பு போன்ற பல்வேறு அதிகாரங்களில் |
| மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம் / திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – சமத்துவம், மனிதநேயம் முதலானவை | • அன்புடமை, நல்குரவு , சூதாட்டம், இனியவை கூறல் , கொல்லாமை , மானம்,ஒப்புறவு அறிதல் போன்ற பல்வேறு அதிகாரங்கள் மற்றும் குரள்கள் |
| சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் | • குடிச்செயல் வகை, பொருள்செயல்வகை, அமைச்சு, கொடுங்கோண்மை, குடிமை, படைச்செருக்கு, செங்கோண்மை, நடுவு நிலைமை, நாடு, இறைமாட்சி இது மாதிரி அதிகாரங்களில் உள்ள கருத்துக்களை புரிந்து படிக்க வேண்டும் |

JOIN OUR TELEGRAM : https://t.me/iyachamyacdemy

## திருக்குறள் ஓர் அறிமுகம்

மக்களாட்சித் தத்துவம், அரசியல், ஆட்சி அமைப்பு ஆகியவற்றைப் பற்றிய அடிப்படைக் கொள்கைகளோடு. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள இணையற்ற கோட்பாடுகளாகிய சமயம் சாராத தன்மை, சமூக நீதி ஆகியவற்றைப் பற்றியும், அரிய பல கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட திருநூல் திருக்குறள். தொன்மை வாய்ந்த நமது மரபையும், புதுமை வாய்ந்த குடியாட்சிக் கோட்பாடுகளையும் கொண்டது திருக்குறள்.

மானுடத்தின் விழுமிய பண்புகளை, அது அறம் சார்ந்ததாயினும் சரி, உலகியல் சார்ந்ததாயினும் சரி, அவற்றை உலகளாவிய அளவில் எடுத்து இயம்பும் சமயம் சாராத ஓர் உன்னத நூல் .சாதி மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு, சகல மனிதருக்கும் பொது நீதியை உரைக்கும் திருமறை திருக்குறளாகும். இந்தியக் குடியாட்சியின் சமயம் சாராத இயல்புக்கு ஏற்ற ஒரே நூல் திருக்குறள்தான்.

அரசன் நாட்டினை ஆளுவதற்கு ஏற்ற வழிமுறைகளைக் கூறும் வகையில் அரசனின் கடமை, அமைச்சர், தூதர், ஒற்றர், வெளிஉறவு, நீதி, வரி, படை, போர், நாடு நிர்வாகம் போன்றவற்றைப் பற்றி விளக்குவதிலும் திருக்குறளுக்கு நிகர் வேறொன்றில்லை. தொலைநோக்குப் பார்வையோடு தொட்டுக் காட்டிய வள்ளுவனின் அன்றைய அரசியல் கோட்பாடுகளை இன்றைய அரசியலோடு


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

பொருத்திப் பார்க்கும் பாங்கினையே திருக்குறளில் அரசியல் கோட்பாடுகள் எனும் தலைப்பு வரையறுத்துக் கூறுகிறது. திருக்குறள் மன்னர்கள் காலத்தில் தோன்றியது என்றாலும் கூட அவற்றிலே கூறப்பட்டுள்ள அரசனின் தன்மைகள், அரசாள்வோனின் பணிகள் முதலியவை இன்றைய குடியாட்சி அரசியலின் உட்பிரிவுகளோடு தொடர்புடையனவாக உள்ளது.

## திருக்குறள் கூறும் வாழ்வியல் நெறிமுறைகள்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என திருவள்ளுவருக்கு புகழ் மாலையாக பாமாலையைச் சூட்டுகின்றார் பாரதியார். தமிழ் இலக்கிய நூல்களுள் முதன்மையானது திருக்குறள். சாதி, மத, சமய வேற்றுமை இல்லாமல் உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவான நீதிகளைக் கூறுவது இந்நூல். எல்லாப் பொருளும் இதன்பால் உள் இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால் என்றுபாராட்டப்படும் பெருமையுடையது. மனிதனை சீர்படுத்தி செம்மைப்படுத்தும் மனித வாழ்க்கையின் அகராதி மற்றும் கலைக்களஞ்சியம் திருக்குறள் என கூறின் அது மிகையாகாது, இத்தகைய வள்ளுவரின் வாழ்வியல் நெறிகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது, அன்புடைமை

மனித உலகத்தை இணைத்து வாழச் செய்யும் அற்புத சக்தி அன்புக்கே உண்டு. விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பேராற்றல் அன்புக்கே உண்டு. வள்ளுவர் இத்தகைய அன்பினை

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

**என்பும் உரியர் பிறர்க்கு " (குறள் :72)**

என்றும், அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களும் தமக்கே சொந்தம் என்று சொல்லி உரிமை கொண்டாடுவார்கள். அன்புள்ளவர்கள் தம் உயிரும் உடம்பும்கூட மற்றவர்க்காக என்றும் வாழ்வார்கள் என்று குறள் கூறுகிறது.

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பில்லாதவர்க்குள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்திக் கொண்டிருக்கும் வெற்றுடம்பேயாகும் என்பது

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு" (குறள் : 80)**

என்னும் குறளாலும் தெளிவாகிறது.

**கல்வி**

நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில்தான் உள்ளது. இளைஞர்களை நல்லவர்களாக சிறந்தவர்களாக உருவாக்க கல்வி மிகவும் அவசியம். கல்விச்செல்வமே நிலையான செல்வம் ஆகும். இதனையே வள்ளுவர்,

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**

**மாடல்ல மற்ற யவை" (குறள் : 400)**

பொருட்செல்வம் வெள்ளத்தாலும் வெழந்தழலாலும் அழியக் கூடியது. கள்வர்களால் கவர்ந்து செல்லக்கூடியது. பிறருக்குக் கொடுத்தால் குறையும் தன்மை வாய்ந்தது. கல்விச் செல்வமோ

பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளரும் தன்மையுடையது. அதனால்தான் கல்வியைக் *கேடில் விழுச்செல்வம்' என்று கூறுகின்றார்.

கற்பவற்றைக் கசடறக் கற்க வேண்டும் பின்பு கற்ற வழியிலேயே நிற்க வேண்டும் என்பதை வள்ளுவர்

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக" (குறள் : 391) என்கிறது குறள்**

**ஒழுக்கம்**

மனித வாழ்க்கையை முறையாக வளப்படுத்தி வளர்ப்பது ஒழுக்கம். ஒழுக்கத்தினால் மட்டுமே தகுதியும் பதவியும் அதனால் பல பெருமைகளும் பெற முடியும் ஆகையால் அந்த ஒழுக்கத்தை உயிர்போலக் காக்க வேண்டும்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப்படும்" (குறள் : 131)**

ஒரு செயல் அவனின் ஒழுக்கத்தினால் மட்டுமே போற்றப்படுகின்றது,

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**

**என்றும் இடும்பைத் தரும்" (குறள் : 138)**

ஒழுக்கம் என்பது ஒரு மனிதன் வாழ்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். ஒரு மனிதனை சிறந்த மனிதனாக மாற்றுகின்றது.

**விருந்தோம்பல்**

பண்டைத் தமிழ்நாட்டில் இல்லற வாழ்க்கையின் முதன்மை கடமைகளுள் ஒன்றாகவே விருந்தோம்பல் கருதப்பட்டது. கணவனும் மனைவியும் இயைந்துதான் அக்கடனை நிறைவேற்ற முடியும் என்றும் அறிந்திருந்தார்கள். கோவலன் தன்னை விட்டுப் பிரிந்ததனால் இல்லறக் கடன்களுள் ஒன்றாகிய விருந்தோம்புதலை ஆற்ற இயலவில்லை எனக் கண்ணகி கோவலனிடம் மதுரையில் கூறி வருந்தியதை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. இதனையே திருவள்ளுவர்,

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் 81)**

இல்லற வாழ்க்கை உடையவர்களே நிலை பெற்ற வாழ்க்கையுடையவர்கள். அவர்கள் அறநெறி போற்றி இல்லறத்தை நடத்துவதே விருந்தினரைப் போற்றி அவர்கட்கு உதவி செய்வதற்குத்தான். பிறருக்கு உதவி செய்யும் விருந்தோம்பலைக் கடைப்பிடிக்கவில்லையானால் இல்லறத்தால் பயனில்லை.

**செய்ந்நன்றியறிதல்**

எத்தகைய அறத்தை அழித்தவர்க்கும் அப்பாவத்திலிருந்து தப்புவதற்கு வழியுண்டு. ஆனால் செய்ந்நன்றி கொன்ற பாவத்தினின்று தப்புவதற்கு வழியேயில்லை என்று வள்ளுவர் கூறுவதனை

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள் : 110)**

என்பதற்கேற்ப செய்நன்றி நினைப்பதற்காகத் தன் உயிரையே பணயமாக வைத்துக் கர்ணனும், கும்பக்கர்ணனும் குறள் கண்ட வாழ்வை வாழ்ந்து காட்டி விட்டார்கள்.

உதவி வேண்டி நின்ற காலத்தில் தப்பாது செய்த உதவி சிறியதாக இருந்தாலும் செய்யப்பட்ட காலத்தை மனதில் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் நில உலகத்தை விட மிகப்பெரியதாம் என்பதனை

**"காலத்தினாற் செய்த உதவி சிறிது எனினும்**

**ஞாலத்தின் மாணப் பெரிது" (குறள் : 102)**

என்னும் குறள் நன்றியின் நலத்தைப் புலப்படுத்துகிறது.

**நட்பு**

உண்மையான நண்பனை ஆபத்துக்காலத்தில் அடையாளம் கண்டு கொள்ளலாம். எனவேதான் 'அருமை சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்" என்னும் பழமொழியை முன்னோர் வழங்கி வந்தனர். இதனை வள்ளுவர்

**"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே**

**இடுக்கண் களைவது ஆம் நட்பு" (குறள் : 788)**

என்னும் குறளில் விளக்குகின்றார். அதாவது நல்ல நண்பன் என்பவன் துன்பம் வந்த காலத்தில் எவ்விதம் உதவுவானெனில் இடுப்பிலுள்ள ஆடை நழுவி விட்டபோது, ஒருவனுடைய கை அவனை அறியாமல் மானம் காக்க சரி செய்வது போல நண்பனுக்குத் துன்பம் வந்ததை அறிந்த அக்கணமே அத்துன்பத்தை தீர்த்து விடுவான். இப்படி இல்லாத நட்பு நமக்குத் தேவையில்லை என்கிறார்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பர். எனவே உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியான முக இயல்பைக் கொண்டே ஓரளவு அறிந்து கொள்ளலாம். அவ்விதம் நட்பு கொள்ளும்போது

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு" (குறள்: 786)**

அதாவது முகம் மலருவதுடன் நெஞ்சமும் ஒத்து மகிழும் உறவே உண்மை நட்பு என்கின்றது வள்ளுவம்.

**துன்பம் விழையாமை**

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்கிறது சிலப்பதிகாரம். ஒருவருக்கு முன்னொரு காலத்தில் நாம் துன்பம் செய்தோமென்றால், பிற்காலத்தில் அத்துன்பங்கள் தாமாகவே நம்மை வந்து சேரும். எந்த ஒரு காலத்திலும் யாருக்கும் மனதளவில் கூட துன்பங்கள் செய்யக்கூடாது.

**"பிறர்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும்" (குறள் : 319)**

**"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**

மாணா செய்யாமை தலை" (குறள் : 317)

எந்த ஒரு உயிர்க்கும் எப்பொழுதும் எக்காலத்தும் துன்பங்கள் செய்யக்கூடாது என்று அறிவுறுத்துகின்றார்.

**மனிதப்பண்பு**

மனிதப் பிறவியில் ஏற்றத்தாழ்வு இல்லை அன்பினால் அனைவரும் பிணைக்கப்பட வேண்டும். உயர் தன்மையில் இருந்தும் உரிமைத் தன்மையில் இருந்தும் வழுக்கி விழாமல் இருப்பவர் எவரோ அவரே மனிதப் பண்பு உடையவர். அவர்களே அறிவு நிறைவு பெற்று பிறர் வாழ்வில் நலம்காண விழைபவர் எவரோ அவரை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்"

என்று பண்பும் பயனும் மிக்க இல்லறத்தை நடத்துபவன் எல்லோராலும் போற்றப்பட்டு உயர்த் தெய்வநிலைக்கு உரியனவாக மதிக்கப்படுகின்றனர் என்கிறார் வள்ளுவர்.

**ஈகை**

ஒரு பொருளும் இல்லாத ஏழைக்கு அவருக்கு வேண்டிய ஒன்றைக் கொடுத்தலே 'ஈகை' எனப்படும்.

"வறியார்க்கொன் றீவதே ஈகை மற்றெல்லாம்

குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள் : 221)

வறியவர்களுக்கு ஈவதே ஈகைப் பண்பாகும் வறியவர் அல்லாத பிறர்க்குக் கொடுப்பதெல்லாம் ஒரு பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதற்குச் சமம் என்று ஈகைக்கு இலக்கணம் வகுத்தார் வள்ளுவர். ஆகவே ஈகை என்னும் சிறந்த அறத்தை வாழ்க்கையின் ஓர் உயரிய பண்பாகக் கைக்கொள்ள வேண்டும்.

திருக்குறள் வாழ்வியல் விழுமியங்களின் களஞ்சியமாகத் திகழ்கிறது. மனிதர்கள் வாழ்வில் எவ்விதத் துன்பமுமின்றி வாழ வேண்டுமென்றால் இன்னாசெய்யாமை, உயிர் கொல்லாமை, செய்நன்றி அறிதல், ஒழுக்கம், அன்பு, கல்வி, விருந்தோம்பல், நட்பு இதுபோன்ற அறச்செயல்கள் என்ன என்பதை அறிந்துகொண்டு அதன்வழி நடக்க வேண்டும் மனிதர்களுக்கு மனிதர்கள் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். வள்ளுவர் வகுத்துக் காட்டும் வாழ்வியல் நெறிகளின்படி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு என்பதில் ஐயமில்லை.

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் எண் - 50)

அறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளில் வாய்மை, பொய்யாமை, செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கம் உடைமை, பிறன் இல் விழையாமை, புறங்கூறாமை பயனில சொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை பற்றிய சிறப்புக் குறிப்புகள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் என்னும் நூலில் திருவள்ளுவர் சுட்டும் வாழ்வியல் அற நெறிகள் ஆகும்.

**பொருள் சார்ந்த வாழ்வியல் நெறிகள்**

பொருளின் நிலையாமைப் பண்பைப் பற்றிப் பேசுவதுடன் நில்லாமல் பொருளின் அருமையையும் தேவையையும், முதன்மையையும் வலியுறுத்திக் கூறியிருப்பது நீதி இலக்கியத்தின் தனித்தன்மை ஆகும்.

**"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**

**இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள் எண் - 247)**

**இன்பம் சார்ந்த வாழ்வியல் நெறிகள்**

இன்பம் சார்ந்த வாழ்வியல் நெறிகள் என்னும் நோக்கில் நீதி இலக்கியத்தை நுணுகி ஆராயும் போது கிடைக்கும் வாழ்வியல் உண்மைகள் திட்பமும், நுட்பமும் வாய்ந்தவை ஆகும். வெறும் உடல் இன்பம் பற்றி மட்டும் சங்க இலக்கியங்கள் பேசவில்லை . அவற்றிற்கு மேலாக தலைவன் தலைவி உள்ளப்புணர்ச்சிக்குச் சங்க இலக்கியம் முதன்மை தந்துள்ளது. (எ.கா) "அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந்தொகை 40)

**விருந்தோம்பல் பண்பு**

தமிழர்களின் இன்னும் சொல்லப்போனால் இந்திய மண்ணின் தலையாய மிகச் சிறந்த குணம் வீட்டிற்கு வந்த விருந்தினரை மனம் கோணாமல் உபசரித்து வழியனுப்புவது,

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத்தவருக்கு" (குறள் - 86)**

வந்த விருந்தினரைப் பேணும் விதம் பற்றி மேலுள்ள குறள் மூலம் கூறியுள்ளார். வீடு தேடி வரும் விருந்தினரை நன்முறையில் உபசரிக்கா விட்டால் அந்த விருந்தினர் நிலை குறித்து,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து" (குறள் - 90)**

எல்லா மலரினும் மென்னையானது அனிச்சம் பூ. அப்பூவை முகர்ந்து பார்த்தால் வாடி விடும். ஆனால் வரும் விருந்தினர்கள் அப்பூவினும் மென்மையானவர்கள் என்றும் அவ்விருந்தினரை முகம் மாறி நோக்கினால் அனிச்சம் பூ வாடுவதனைப் போல விருந்தினர் முகம் வாடிவிடுவர் என்று விருந்தோம்பல் என்ற வாழ்வியல் கூற்றின் மென்மையை அனிச்ச மலருக்கு ஒப்பிடுகிறார் வள்ளுவர். இவ்வாறாக இல்வாழ்க்கையில் வாழ்வியல் கோட்பாட்டைக் கூறும் வள்ளுவர் தனிமனிதனுக்கென்று சில வாழ்வியல் நெறிகளையும் கூறியுள்ளார்.

**இன்னா செய்யாமை**

ஒருவன் தான் செய்த பாவ புண்ணியங்களின் பலன்களை அனுபவிக்க வேண்டும் என்றும் ஒருவனுக்கு முற்பகல் தீங்கு செய்தால் பிற்பகலிலேயே அத்தீங்கை அனுபவிக்க நேரும் என்ற நீதியையும் வலியுறுத்துகிறார் திருவள்ளுவர் இதனை,

**"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும்." (குறள்- 319)**

ஒருவன் தனக்கு இன்னாத செயல்களைச் செய்தாலும் பழிக்குப் பழி வாங்காமல் அவர் நாணும் படி அவருக்கு நன்மை செய்ய வேண்டும். இதனை வள்ளுவர்


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயம் செய்து விடல்". (குறள் - 314) என்று கூறுகிறார்.**

**புறங்கூறாமை**

மனிதனுக்கு மனிதன் தீங்கு செய்யாதது மட்டுமல்ல செய்த தீமையை மன்னித்து விட வேண்டும் என்று கூறும் வள்ளுவர் ஒருவரைப் பற்றி அவர் இல்லாத போது அவரைப் பற்றிப் புறங்கூறுதல் கூடாது, இதுவே சாலச் சிறந்த பண்பு என்று கூறுகிறார். பேசும் போதும் நமக்கும் பிறர்க்கும் பயனுடைய சொற்களையே பேச வேண்டும். பயனில்லாத சொற்களைச் சொல்லக் கூடாது என்பதனை

**"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**

**சொல்லிற் பயனிலாச் சொல்." என்று அறிவுரை கூறுகிறார்.**

**இனியவை கூறல்**

மனிதனின் வாழ்நாள் சிறிது . அதில் சாதிக்க வேண்டியவை எண்ணற்றவை. கூடிவாழும் மனிதர்களுடன் நல்லுறவு இருந்தால் தான் வாழ்க்கையில் நல்ல காரியங்களைச் சாதிக்க முடியும். நல்லுறவு கொள்ள நல்மொழிகளைப் பேசத் தெரிந்திருக்க வேண்டும். பிறர் மனம் புண்படாத படி பேசத் தெரிதல் வேண்டும் என்றும் கூறியுள்ளார். இனிய சொற்கள் இருக்கும் போது கசப்பான சொற்களைப் பேசுவது கனி இருக்கும் போது காயை உண்பதற்குச் சமமானது என்று கூறுகிறார்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**

**கனியிருப்பக் காய்க் கவர்ந்தற்று." ( குறள் - 100) என்று கூறுகிறார்.**

**அறவழியில் பொருளீட்டல்**

பொருள் சேர்க்க விரும்பும் மனிதன் அவனுடைய திறத்தினை அறிந்து நேர்மையான சிந்தனையோடு பொருளீட்ட வேண்டும். அவ்வாறு பொருள் ஈட்டுவதால் கிடைக்கும் இன்பம் மிகப் பெரியது என்பதனை அறிந்த வள்ளுவர்,

**"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**

**தீதின்றி வந்த பொருள்" (குறள் - 753)**

என்று வலியுறுத்தியுள்ளதை அறிய முடிகிறது. வள்ளுவரின் கருத்தை ஒட்டி ஆடம் ஸ்மித்தும் பின்வருமாறு தனது கருத்தினை, "மனிதனின் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையானது பொருள் சேர்த்தலாகும். ஒரு நாடு அல்லது ஒரு மனிதன் பொருளினைச் சேர்க்க அயராது உழைக்க வேண்டும். அதன் மூலம் அவன் வளர்ச்சி அடைய முடியும். இதற்கு அவன் திறமையுடன் நேர்மையான சிந்தனையோடு பொருளினைச் சேர்க்க வேண்டும்" என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

**கல்விச் செல்வம்**

பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும். கல்வியைச் செல்வமாகக் கருதிய வள்ளுவர்,

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**

**செல்வத்துள் எல்லாம் தலை." (குறள் - 411) என்று பாடியுள்ளார்.**

அதாவது செவி வழியாக கற்கக் கூடிய கல்வியினை ஒரு செல்வம் என்றும் அதுவே தலையாய செல்வம் என்றும் கூறுகிறார். மதிக்கத் தகாதவர்களைக் கூட மதிக்கும் அளவிற்கு மாற்றும் சிறப்பு கல்விக்கு உண்டு.

**"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**

**பொருளல்லது இல்லை பொருள்" (குறள் - 751)**

என வள்ளுவர் கூறியதன் மூலம்," கற்றோருக்கு செல்லும் இடமெல்லாம் சிறப்பு" என்ற வாக்கியம் உருவானது எனலாம். அதற்காக கல்வி கற்காதவன் அவமதிப்புக்கு உரியவர்கள் என்பது பொருளல்ல. அனைவரும் கல்விச் செல்வத்தைப் பெற வேண்டும் என்பது குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

**கூடாத நட்பு**

யாரை நட்பாகக் கொள்ள வேண்டும் என்று கூறிய பின் யாருடைய நட்பை விலக்க வேண்டும் என்றும் கூறுகிறார். தம்முடைய காரியம் ஆகும் வரை ஒத்திருந்து , காரியம் முடிந்ததும் விலகிச் செல்பவர் நட்பு கூடாத ஒன்று. அன்பு பிணிப்பு இல்லாதவர் நட்பு வைக்கோலில் பற்றியத் தீப்போல நீடித்து நிற்றலின்றி அழியும் மன ஒற்றுமை இல்லாதவர் நட்பு துன்பம் தரும் என்ற எச்சரிக்கையும் செய்கிறார். இதனை வள்ளுவர்,

**"வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எறிமுன்னர்**

**வைத்துறு போலக் கெடும்." (குறள் - 435)**

**அன்பு**

அன்பு என்பது உயர்திணைக்கு மட்டும் உரியதல்ல ஆஃறிணை உயிர்களுக்கும் உரித்தான பண்பாகும். எல்லா உயிர்களும் அன்பால் ஒன்றாக்கப்படுகின்றன. அன்பின் சிறப்பினை உணர்ந்த வள்ளுவர்,

**"என்பிலதனை வெயில் போலக் காயுமே**

**அன்பி லதனை அறம்." (குறள் - 77)**

எலும்பு இல்லாத புழு போன்ற உயிரினங்கள் வெய்யில் சுட்டெரித்து அழிப்பது போல, அன்பு இல்லாத உயிர்களை அறம் சுட்டெரித்து விடும் என அன்பின்மை அறத்திற்குப் பகை எனக் கூறுகிறார். அன்பு என்ற பண்பினால் இவ்வையகம் திளைக்கும் என்பதை உணர்ந்த வள்ளுவர் அன்பினைப் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

**திருக்குறளில் நாகரிகக் கூறுகள்:**

மக்கள் எல்லாராலும் விரும்பத்தக்க நாகரிகத்தையே விரும்புவர். தமக்கு நெருக்கமானவர் நஞ்சையே தருகிறார் என அறிந்தும் கண்ணோட்டம் காரணமாக அதை உண்டு அவருடன் பழகுவர் எனும் நாகரிகக் கோட்பாட்டைக் காணலாம்.

**"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**

**நாகரிக வேண்டுவ பவர்" (குறள் - 580)**

# திருக்குறளில் மனித உரிமைகள்

1. வாழ்வு உரிமை ( Right to life)

2 .பொருளாதார உரிமை ( Economic right)

3. கல்வி உரிமை (Right to education)

4. பேச்சுரிமை ( Right to expression)

5. நீதி பெறும் உரிமை (Right to equality before law)

6 .தன்னுரிமை ( Right against self injury)

ஆகிய மனித உரிமைகள் காணப்படுகின்றன.

**வாழ்வுரிமை**

உலகில் பிறந்த அனைவருக்கும் வாழுகின்ற உரிமை உள்ளது. வாழ்வுரிமை என்பது உயிர் வாழும் உரிமை எனப் பொருள் கொள்ளுதல் சரியாகாது; தரமான வாழ்விற்குரிய உரிமை எனக் கொள்ளவேண்டும். வாழ்க்கைத் தரம், சுகாதாரச் சுற்றுச்சூழல், தூய்மையான பணியிடம், தேவையான ஓய்வு உள்ளிட்ட அனைத்தையும் உள்ளடக்கியதே வாழ்வுரிமை ஆகும்.

சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் முதல் பிரிவானது, “எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும், மாண்போடும், உரிமைகளோடும், சமத்துவத்தோடும் பிறக்கின்றனர். அவர்களுக்கு அறிவும், மனசாட்சியும் உள்ளன. எனவே, ஒருவருக்கு ஒருவர் சகோதர உணர்வோடும், ஒருவரை ஒருவர் மதித்தும் வாழ வேண்டியது அவர்தம் கடமையாகும்” என்று குறிப்பிடுகின்றது. இதனைத் திருவள்ளுவர்,

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” (குறள் 972)**

**என்று உணர்த்தியுள்ளார்!**

பிறப்பினால் எவரும் வேறுபடுவதில்லை; பிறப்பினால் மனிதர்களை வேறுபடுத்துவது தவறு. “உழைப்பே உயர்வளிக்கும்” என அறிவுறுத்துகிறார். மேலும் ஒவ்வொருவருக்கும் பசி, பிணி, பகையின்றி வாழும் உரிமை உள்ளதென்றும், அவற்றினின்று தம் குடிமக்களைக் காத்தல் அரசின் கடமையென்பதை,

**“உறு பசியும் ஓவாப்பிணியும் செறு பகையும்**

**சேறாது இயல்வது நாடு” (குறள் 734)**

எனத் திருவள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருட்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், அவற்றைக் குடிமக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகத் திறன்படச் செய்பவனே நல்ல அரசன் என்ற கருத்தை,

**“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்லது அரசு” (குறள் 385)**


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

என்று வள்ளுவர் மொழிகின்றார். அத்தகு அரசனின் கீழ் வாழும் குடிமக்கள் அச்சமும், கவலையுமின்றி இனிது வாழ்வர்; அவர்தம் வாழ்க்கைத் தரம் நன்கு விளங்கும். இத்தகு வாழ்வுரிமை அவ்வரசின் கீழ் வாழும் அனைத்துக் குடிமக்களுக்கும் உண்டு என வள்ளுவர் அறிவுறுத்துவது நோக்கத்தக்கது.

**உணவு உரிமை**

வாழ்வுரிமைகளில் மிகவும் இன்றியமையாதது "உணவு உரிமை" ஆகும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் பசியின்றி உணவுண்டு மகிழ்வாக வாழ்வதற்கு உரிமை உடையன. மேலும் உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உணவு கிடைக்கச் செய்வது உலகை ஆளுகின்ற அரசாங்கத்தின், சமுதாயத்தின் கடமையாகும். வள்ளுவர் வாழ்ந்த சமுதாயத்தில் பொதுவுடைமை, ஜனநாயகம் போன்ற கருத்துக்கள் தழைத்தோங்காத காலம். தனியுடைமைத் தத்துவத்தை ஏற்றுக் கொண்ட சமுதாயம். அத்தகைய சமுதாயத்தில் வளமையும் வறுமையும், ஏற்றமும் தாழ்வும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் வறுமையின் பிடியில் சிக்கி, பசியால் இறந்தநிலையும் வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் இருந்துள்ளது. இச்சீர்கேட்டினை எண்ணி மனம் வெதும்பிய வள்ளுவர் தமது திருக்குறளில் நல்குரவு, இரவு, இரவச்சம் ஆகிய அதிகாரங்களைப் படைத்துள்ளார். ஒரு சாரார் வளமுடன் வாழும் நிலையில், மற்றொரு சாரார் பிச்சை எடுத்து உண்ணும் நிலை சமுதாயத்தில் நிலவுகிறதல்லவா? அதற்குக் காரணமாக நாம் அனைவரும் விதியை நொந்து கொள்ளுகிறோம்! இறைவனைச் இழித்தும் பழித்தும் தூற்றுகிறோம்!

திருவள்ளுவர் இந்நிலைக்கு இறைவனும், விதியும் காரணமென்றால், அவ்விறைவன் எதற்கு என்று நினைத்து,

> **"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து**
>
> **கெடுக உலகு இயற்றியான்" (குறள் 1062)**

என்று சாபமிடுகிறார்!

பிச்சையெடுத்துதான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலையில் இறைவன் உயிர்களைப் படைத்திருந்தால், அப்படிப் படைத்தவனே இந்த உலகிற்கு வந்து பிச்சையெடுப்பவரைப்போல தானும் அலைந்து திரிந்து கெட்டுப் போகட்டும் எனக் கோபமுற்றுக் கூறுகிறார்

சமுதாயத்தில் எல்லோரும், எல்லாமும் பெற்றுச் சமமாக வாழும் உரிமை உள்ளது என்பதை இக்குறள் நமக்கு எடுத்தோதுகிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வு, அதனால் ஏற்படும் வறுமை, அதன் விளைவாய் இரத்தல் ஆகியவை கொடுமை. இக்கெடுமைகளற்ற சமுதாயமே மனிதனையும் மனித வாழ்வையும் உயர்த்த முடியும் என்ற கருத்தை இதன்மூலம் தெளிவுறுத்துகிறார்.

**பொருளாதார உரிமை**

பொருள் தேடும் உரிமை, அதனைப் பாதுகாக்கும் உரிமை சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் உண்டு எனத் திருக்குறள் தெளிவுறுத்துகிறது. அப்படிப் பொருள் தேடுவது அறவழியில் அமைய வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது.

வினைத்தூய்மை என்ற அதிகாரத்தில்,

> **"அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்**


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

**பிற்பயக்கும் நற் பா லவை" (குறள் 656)**

என்று திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

பிறர் வருந்தும்படி ஒருவன் அடைந்த பொருள் அனைத்தும், பொருளானது தன்னைப் பெற்றவன் வருந்தி அழும்படி அவனை விட்டுப் போய்விடும் தன்மை கொண்டது. நல்ல வழியில் வந்த பொருள் தொலைந்தாலும் பின்னர் நன்மையே தரும். பொருளாதார உரிமை அனைவருக்கும் உண்டு. அப்பொருளைத் தேடுவதற்காக அடுத்தவர் உரிமையை மீறுவது தவறு; அற வழி தவறி முறையற்ற வகையில் பிறரை வஞ்சித்துப் பொருள் சேர்ப்பது கீழ்த்தரமான செயலாகும்; அஃது இகழ்தற்குரியது. வள்ளுவர் இதனை,

**"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க**

**சான்றோர் பழிக்கும் வினை" (குறள் 656)**

என்று எடுத்துரைக்கின்றார்.

தன்னைப் பெற்ற தாய் பசியால் வாடுவதைப் பார்த்து மனம் வருந்தி வேதனைப்படும்பொழுதுகூட, சான்றோர்கள் பழிப்பதற்குக்குக் காரணமான இழிந்த செயல்களை செய்யக் கூடாது.

அறமற்ற வழியில் பொருள் சேர்த்தல் தவறு என்று மக்களுக்கு உணர்த்தி, சரியான முறையில் பொருளீட்டும் முறைதனை உணர்த்துவதால் லஞ்சமற்ற, சுரண்டலற்ற சமுதாயத்திற்கு வள்ளுவப் பெருந்தகை வழி காட்டுகிறார்!

பிறருக்குக் கொடுமை செய்து கீழ்த்தரமாக நடத்துதல்

உலக மனித உரிமைகள் பிரகடத்தின் 5-ம் பிரிவுவானது "எவரையும் சித்திரவதை செய்யக்கூடாது. கொடூரமாக, மனிதத் தன்மையற்றுக் கேவலமாக நடத்தக்கூடாது. கேவலமான தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது" என்று எடுத்துரைக்கின்றது. அரசு குடிமக்களை கண்ணோட்டமின்றி வருத்தக்கூடாது. அவர்கள் ஆற்றாது அழுத கண்ணீரே கொடுங்கோல் அரசைத் தேய்க்கும் படையாக அமையும். எனவே அரசன் நேர்மையான முறையில் தன் குடி மக்களைக் காத்து நேரிய வழியில் அறவழியில் ஆட்சி செய்ய வேண்டுமென்று திருவள்ளுவர் எச்சரிக்கிறார். இதனை,

**"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே**

**செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள் 555)**

என்ற திருக்குறள் எடுத்துரைக்கின்றது. கொடுங்கோல் ஆட்சியினால் துன்பப்பட்டுத் தாங்க முடியாமல் மக்கள் குமுறி அழும் கண்ணீரே முறையற்ற ஆட்சியை அடியோடு அழிக்கும் ஆயுதமாகும்.

**உணர்வுகளைப் புண்படுத்துதல்**

மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்துதல் மனித உரிமை மீறல் ஆகும். மனிதனை அவனுடைய உள்ளார்ந்த உணர்வுகளோடு மதிக்க வேண்டும் என்பது மனித உரிமையாகும். சுடுசொற்களினால் அடுத்தவரது உணர்வுகளைப் புண்படுத்துதல் கூட உரிமை மீறல் ஆகும் என்ப தை,

**"இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்**

**எவன்கொலோ வன்சொல் வழங்குவது". (குறள் 99)**

எனத் திருவள்ளுவர் தெளிவுறுத்துகிறார்.

பிறர் சொல்லும் இனிமையான சொற்கள் தனக்கு இன்பத்தைத் தருவதை உணர்ந்த பிறகும், மற்றவர்களிடம் கடுமையான சொற்களைப் பேசுவதனை மனிதர்கள் தவிர்த்தல் வேண்டும்.

பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பம் தருவதைக் காண்கின்றவன், தன் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றவன், தான் மட்டும் பிறரிடம் வன்சொல் கூறி அவர்கள் மனத்தைப் புண்படுத்துதல் முறையாகாது. அது மனித உரிமை மீறலாகும் என்று வள்ளுவர் மொழிகின்றார்.

**எழுத்துரிமையும் பேச்சுரிமையும்**

மனித உரிமைகளுள் முக்கியமான ஒரு உரிமை தன் கருத்துக்களை எழுத்து, பேச்சு மூலம் வெளிப்படுத்துவது. இது இல்லையெனில், மற்ற உரிமைகளும் பயனற்றுப் போகும். மனிதனுக்குச் சொல்லுரிமை இருக்கிறது என்று கூறும் திருவள்ளுவர், அத்திறமையை வளர்த்துக் கொள்வதற்கு ,

**"சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல் அச்சொல்லை**

**வெல்லும் சொல் இனிமை அறிந்து". (குறள் 645)**

என்று வழி காட்டுகிறார்.

தான் சொல்லுகின்ற சொல்லை வெல்லக் கூடிய வேறு ஒரு சொல் எதுவும் இல்லை என்பதை நன்கு அறிந்த பின்னரே சொல்ல நினைத்த சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்பதை,

**"சொலல் வல்லன் சோர்வு இலான் அஞ்சான் அவனை**

**இகல் வெல்லல் யார்க்கும் அரிது" (குறள் 647)**

என்று தெளிவுறுத்துகின்றார். எதையும் சொல்லுவதில் வல்லவனாகவும், மறதியும், சோர்வும் இல்லாமல் சொல்லுபவனாகவும், எதற்கும் பயப்படாதவனாகவும் உள்ள சொல்வன்மைமிக்கவனை யாராலும் வெற்றி கொள்ள முடியாது. வள்ளுவரின் இக்குறட்பாக்கள் மனிதனுக்குள்ள எழுத்துரிமையையும் பேச்சுரிமையையும் விளக்குவனவாக அமைந்துள்ளன.

**நீதி பெறும் உரிமை**

உலக மனித உரிமைப் பிரகடத்தின் 7, 8 பிரிவுகள் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று எடுத்துரைக்கின்றது. இவ்வுலகில் வாழும் அனைவரும் சட்டப்படி சமமான பாதுகாப்புரிமை படைத்தவர். எவ்வகையான பாகுபாடும் காட்டப்படாமல் சமமாக நடத்தப்பட ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அடிப்படை உரிமைகள் சட்டப்படி அளிக்கப்படவும், அவை மீறப்படும் பொழுது தகுதி வாய்ந்த நீதி அமைப்புகளின் மூலம் தீர்வுகள் பெறும் உரிமையும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உண்டு.

**"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**

**இறையென்று வைக்கப் படும்". (குறள் 388)**


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

நீதி நெறி முறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வமென மதித்துப் போற்றுவர்.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்கவும், நீதியைப் பெறவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையை நிலை நாட்டுவது அரசின் கடமை என்பதைத் திருவள்ளுவர் அறத்துப்பால் "நடுவு நிலைமை" அதிகாரத்தின் வாயிலாகத் தெளிவுபடுத்துகிறார். வலியுறுத்துகிறார். அரசு மட்டுமல்லாது மக்களும் நடுவு நிலைமை தவறாது வாழ வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்தியிருப்பது போற்றுதற்குரியதாகும்.

**கல்வி உரிமை**

கல்வியானது உலகை உய்விக்கும் ஒப்பற்ற கருவியாகும். கல்வியே மனிதனை மனிதனாக்குகின்றது, பண்பட்ட மக்களாக மாற்றுகின்றது. சமுதாயம் முன்னேற்றம் காண்பது கல்வியினாலேயே என்பது குறிப்பிடத்தக்கது. அத்தகைய கல்வியை அரசு அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அனைத்துத் தரப்பு மக்களையும் கல்வி கற்க வேண்டும் என்று அரசானது மக்களைக் கட்டாயப்படுத்தல் வேண்டும். அதை நமது நடுவண் அரசு சட்டமாக இயற்றியுள்ளது. இதனைப் புரிந்து கொண்டு, அதை முழுமையாக ஏற்று வெற்றி அடையச் செய்ய வேண்டியது மக்களின் தலையாய கடமையாகும். கல்வி பெறுவதை ஒரு மனித உரிமையாகக் கருதிக் காத்தல் வேண்டும்.

அதனாலேயே வள்ளுவர் கல்வி கற்றலின் இன்றியமையாமையை ஓர் அதிகாரம் முழுமையும் விளக்கியுள்ளார். கல்லாதலினால் ஏற்படும் கேட்டினையும் வள்ளுவப் பெருந்தகை தெளிவுபடுத்தியுள்ளார்.

கல்வி இன்னாருக்குத்தான் உரியது என்று வறையறுக்காது, அனைவருக்கும் பொது என்பதை,

**"யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என ஒருவன்**

**சாந்துணையும் கல்லாதவாறு". (குறள் 397)**

என வள்ளுவர் விளக்குகிறார்.

கற்றவர்களுக்குத் தன் நாட்டையும் ஊரையும் போலவே பிற நாடுகளும் ஊர்களும் உரிமை உடையவனவாகும். அப்படி இருக்க ஒருவன் சாகும்வரை கற்காமல் காலத்தை வீணாக்குவது ஏன்? என்று வியக்கிறார் வள்ளுவர். மேலும் கல்வியே மனிதர்களுக்கு உற்ற துணை என்பதை,

**"கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவர்க்கு**

**ஒற்கத்தின் ஊற்றாம் துணை". (குறள் 414)**

என எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். ஒருவன் கற்கவில்லையென்றாலும் கற்றவர்கள் சொல்வதைத் தவறாமல் கேட்டறிய வேண்டும். அது அவன் தளர்ச்சி அடையும்போது ஊன்றுகோல் போன்று துணையாய் அமையும். கேடில் விழுச்செல்வம் கல்வி அனைவருக்கும் உரியது; ஒருவன் அனைத்து முயற்சியும் செய்து கல்விச் செல்வத்தைப் பெற வேண்டும். அது அவனது உரிமையாகும் என்பது வள்ளுவர் தரும் கல்வியுரிமை குறித்த சிந்தனையாகும்.

**தன்னுரிமை**

யாரும் தன்னுடல், உயிர், உள்ளம் (ஆன்மா) ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கக் கூடாது என்பது "தன்னுரிமை" எனப்படும்.

ஒருவன் ஒன்றை அறிந்து கொண்டே பொய் சொல்லுதல் தன்னுரிமை மீறிய செயல் ஆகும். அவ்வாறு செய்தால் அவருக்கு அவர் மனமே துன்பத்தைக் கொடுக்கும் இதனை,

**"தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**

**தன் நெஞ்சே தன்னைச் சுடும்". (குறள் 293)**

என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

உறங்கியவர்கள், இறந்தவர்களைவிட வேறுபட்டவர்கள் ஆக மாட்டார்கள்; அதேபோல் கள் குடிப்பவர்கள் அறிவு மயங்குகின்ற காரணத்தினால் விஷம் குடிப்பவரினின்று வேறுபட்டவர் அல்லர். பிறன் மனைவியை விரும்பி, வஞ்சகமாய் வாழ்கின்றவனிடம் பகை, பாவம், பயம், பழி ஆகிய நான்கு குற்றங்களும் எப்பொழுதும் நீங்காமல் நிலைத்து நிற்கும். இத்தகைய தன்னுரிமைகளை,

**"துஞ்சினார் செத்தாரில் வேறுஅல்லர்; எஞ்ஞான்றும்**

**நஞ்சு உண்பார் கள் உண்பவர்". (குறள் 926)**

**"பகை பாவம் அச்சம் பழியென நான்கும்**

**இகவாவாம் இல் இறப்பான் கண்". (குறள் 146)**

என வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

**கடமையும் உரிமையும்**

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. "கடமையை ஒழுங்காகச் செய்யாதவருக்கு, உரிமையைக் கோருவதற்கு உரிமையில்லை" என்று அறிஞர் மு.வரதராசனார் கூறுவது நோக்கத்தக்கது.

பிறர் நலனைப் பேணுவதற்காக, பிறர் உரிமைகளைப் பாதுகாப்பதெற்கென சட்டம், எதை விதிக்கின்றதோ அதைத் தவறாது செய்தலும், செய்யக் கூடாதவற்றை செய்யாதிருப்பதும் நமது கடமை ஆகும்; நாம் கடமையைச் சரிவரச் செய்யும்பொழுது உரிமை இயல்பாகக் கிடைத்து விடும் என்பதை,

**"குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்**

**மடிதற்குத் தான் முந்துறும்". (குறள் 1023)**

**திருக்குறள் கூறும் அரசியல் நெறிகள்**

திருக்குறளில் சொல்லப்பட்ட அரசியல் அறநெறிகள் அக்காலத்தேவை கருதி சொல்லப்பட்டாலும் எக்காலத்துக்கும் எந்நாட்டு அரசியல் அணுகுமுறைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கி, அரசு செயல்படவேண்டிய முறைகளின் நுட்பங்களை எடுத்தியம்புகிறது. படை, குடி, கூழ், நட்பு, அமைச்சு, அரண் ஆகிய உறுப்புக்களை உடையதாக திருக்குறள் அரசியலை விவரிக்கிறது.

அரசியல் அதிகாரங்களில் அரசனின் இயல்புகள், மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகள், அவன் ஆற்றவேண்டிய கடமைகள், நாட்டின் சிறப்பு, நாட்டில் வாழும் மக்களின் சிறப்பு போன்ற செய்திகளை, இறைமாட்சி, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல்,


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

பெரியாரைத்துணைக்கோடல், சிற்றினம் சேராமை, தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றம் தழால், பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம் ஒற்றாடல், ஊக்கம் உடைமை, மடியின்மை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை ஆகிய இருபத்தைந்து அதிகாரங்களில் திருக்குறள் அரசியல் பற்றியும் ஆட்சிமுறை பற்றியும் உரைக்கிறது.

**நாட்டை ஆளும் அரசு**

நாட்டை **ஆளும்** அரசு எப்படி இயங்க வேண்டும். அரசு எவ்வாறு செலுத்தப்படவேண்டும் என்பதை வள்ளுவர் கீழ்வருமாறு உரைக்கிறார். அரசுக்குப் பொருள் சேரும் வழிகளை மேலும் உருவாக்குதலும், அப்படிச் சேர்த்த பொருளை முறையாகத் தொகுத்தலும், அவற்றை தகுந்த முறையில் காத்தலும், காத்தவற்றை தக்க செலவீனங்களுக்குச் செய்தலுமே வல்லமையான அரசு என்கிறார்.

**“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு”**

(குறள். 385)

**அரசின்கீழ் இயங்கும் நாடு**

அரசின்கீழ் இயங்கும் நாடானது, பசியில்லாமலும், பிணியில்லாமலும், அயல்நாட்டின் பகையில்லாமலும் இருத்தலே நலமாக அமையும். நாட்டினது அரசு நாட்டுப்பொருளால் பாரபட்சமின்றி அனைவருக்கும் பசிதீர்க்கும் அரசாகவும், பற்பலத் திட்டங்களின் வழி நாட்டு மக்களின் சுகாதாரத்தைப் பேணும் அரசாகவும், மற்றைய நாடுகளுடன் பகைகொள்ளாது அமைதியை விரும்பும் நாடாகவும் இருப்பதையே சிறந்த நாடென திருக்குறளானது நாடு இருக்கவேண்டிய இயல்பினை எடுத்துரைக்கிறது.

**”உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு”**

(குறள்.734)

**ஆட்சி செய்வோருக்கு இனியது**

சமுதாயத்திலுள்ள குடிமக்கள் வாழ்க்கை நன்னிலை பெற செம்மையான நெறிகளை வகுத்து ஆட்சிபுரிதல் அரசின் கடமையாகும். மக்களின் இயல்பையும், தேவைகளையும் உணர்ந்து செயல்படும் செங்கோன்மையாக அறம் தவறாது, அல்லவை நீக்கி அரசானது சமுதாயத்தினை மேன்மையுறச் செய்தல் வேண்டும் என்கிறது கீழ்வரும் குறள்.

**“அறனிழுக்கா தல்லவை நீக்கி மறன்இழுக்கா**
**மானம் உடையது அரசு”**

(குறள்.384)

**அரசியல் நெறி**

குடிமக்களுக்கு வேண்டியவற்றைச் செய்துகொடுக்குத்துச் சமுதாயத்தை மேன்மையுறச் செய்யும் அரசையும் அரசனையும் இவ்வுலக உயிர்கள் அடைக்கலமாகக் கொண்டு வாழும் என திருக்குறள் அரசியல் நெறியினை நயம்பட உரைக்கிறது.

**"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

**(குறள்.544)**

**அரசின் தொழில்**

குடிமக்களை வருந்தவிடாமலும் தானும் வருந்தாமலும் மக்களைக் காத்து மக்களுக்குத் துன்பம் விளைவிப்பவரை அடையாளங்கண்டு அவர்க்கு தண்டனையளித்துத் தன் பணியைச் செவ்வனே செய்பவரே நல்ல ஆட்சியாளர் எனவும். குற்றத்தை கடிந்துரைத்தல் ஆள்பவருக்கு வடுவாகாது. மாற்றாக அது ஆள்பவரின் தொழிலே ஆகும் என்கிறது இக்குறள்.

**"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்"**

(குறள்.549)

**அரசுக்குத் துணையாவன**

நாட்டை ஆளும் அரசுக்கு துணைநிற்பவர்கள் அமைச்சர்கள். இம்மரபு அக்காலம் தொட்டே ஆட்சிமரபாக இருக்கின்றமையைக் காணமுடிகிறது. நாட்டை ஆள்பவர் முதல்வராகிறார். முதல்வருக்குத் துணையாக அமைச்சர்கள் இருக்கிறார்கள். இவ்வமைச்சர்கள் எங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுதல் நலம் என்பதை அமைச்சு அதிகாரத்தின்வழி வள்ளுவர் சுட்டுகிறார்.

**"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந்**
**திறனறிந்தான் தேர்ச்சித் துணை"**

(குறள்.635)

அறநெறியினை நன்கு உணர்ந்தவராகவும், சொற்திறன் கொண்டவராகவும், செயல்திறன் உடையவராகவும் இருப்பவரே ஆலோசனைகள் கூறக்கூடிய துணையாக அரசுக்கு விளங்க முடியும் என்கிறது மேற்காணும் குறள்.

**அரசின் செங்கோன்மைப் பாங்கு**

குற்றங்களை ஆராய்ந்து எவரிடத்திலும் பாரபட்சம் காட்டாமல், இவர் வேண்டியவர் இவர் வேண்டாதவர் எனப்பாராது நடுநிலையோடு குற்றத்தினை அறிந்து தண்டனை வழங்கச் சொல்லும் மன்னனின் செங்கோன்மையை வள்ளுவர் பின்வருமாறு உணர்த்துகிறார்.

**"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்து செய்வதே முறை"**

(குறள்.541)

இக்கருத்தினை அடியொற்றிய நான்மணிக்கடிகையின் பாடலொன்று, மன்னன் என்பவன் எத்தகையவரிடமும் ஒருசார்பின்றி ஆட்சிபுரிவதே நீதிமுறை எனவும், நடுநிலையோடு இருந்து ஆராய்ந்து நடப்பவனே அரசாளும் இயல்புடையவனாவான் எனவும் அரசாளும் தகைமையினைச் செப்புகிறது.

**எது நல்ல நாடாகும்**

நாடானது குறைவில்லாத விளைச்சலைப் பெற்றுவிளங்குதலும், அதன்வழி குறைவிலாது அறநெறி அறிந்தவர் வாழ்தலுமாகிய பண்புகளைக் கொண்டநாடு செல்வமிக்கோர் நாடாகச் சேரும் என நாட்டினுடைய இயல்பினை இயம்புகிறது. இங்கு அறநெறிக்கு அடிப்படை விளைச்சலால் நாடு செழிப்படைதலே. நாடு வறுமையுறின் அறநெறிக்குக் கேடு விளைந்து மக்களும் துன்பம் நேரும் என்பது மறைபொருளாக உரைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு"**

(குறள்.731)

வள்ளுவர் சுருங்கச் சொன்ன இக்கருத்தை சிறுபஞ்சமூலத்தின் பாடலொன்று சற்றே விரித்துச் சொல்லுகிறது. வயலில் நீர் உயரவே நெல் உயரும். நெல் உயர்ந்து வளங்கொழித்தால், அதனை நம்பிவாழும் சீர்பெற்ற குடிகள் உயரும். பல்வேறு குடிகளாகிய மக்கள் உயர்ந்தால் அரசர் உயர்வடைவார் என உலகு உரைக்கும் என்கிறது.

**அரசுக்குக் கூடாதன**

நாட்டை ஆள்வோர் தன்னலத்தைப் பெரிதாகக் கொண்டு நாட்டு வளங்களைச் செழிக்கச் செய்யாமல், கிடைத்த பொருளை வீணாய்ச் செலவிட்டு பொருளனைத்தும் தீர்ந்தபின்பு, அரசை நடத்த மீண்டும் மக்களிடமே பொருள்வேண்டி நிற்கும் நிலையை மிகக் கடுமையாக வள்ளுவர் சாடுகிறார். செங்கோல் ஏந்திய மன்னன் மக்களிடத்தில் பொருள்வேண்டுதல் என்பது வழிப்போக்காகச் செல்பரிடம் வழிப்பறி செய்பவன் வேல்எனும் ஆயுதம் கொண்டு பொருள் பறிப்பது போன்றதாகும் என்கிறார் வள்ளுவர்.

**"வேலோடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலோடு நின்றான் இரவு"**

(குறள்.552)

இங்கு இரவு என்பது மக்களிடம் மன்னன் வேண்டிநிற்பதைக் குறிக்கிறது.

**முறைசெய்து காக்கும் அரசுக்குப் புகழ்**

நாட்டையாளும் ஆட்சியாளனாகிய மன்னவன் கற்றறிந்து, செங்கோலாட்சி புரிந்து, பகிர்ந்துண்டு, தக்கநெறியில் பொருள் சேர்த்து, சீரிய திட்டங்கள் வகுத்து, நல்லியல்புடைய அமைச்சரவையோடு கூடியிருந்து தம் ஆட்சித்திறத்தால் பொருள் வழங்கி நல்லாட்சி தருபவனாக இருத்தலே நலமுடையதாகும். இத்தகைய நெறிமுறைகளை உணர்ந்து ஆட்சி செய்பவரை

மக்கள், நல்லாட்சியாளர் எனக் கருதுவதோடு மட்டுமல்லாமல் ஒருபடி மேலே சென்று இறைவனுக்கு இணையாக வைத்துப் போற்றுவர் என்கிறது திருக்குறளின் அரசியல் நெறி.

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்”**

(குறள்.388)

திருக்குறள் கூறும் இத்தகைய அரசியல் நெறிகள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாக இருப்பதே இதன் தனித்தன்மையாகும். "திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சி காலம். அந்த காலத்தில் அவர் அரசர்க்குச் சொன்னவையாக அமைந்த அறிவுரைகள் இன்று குடியாட்சிமுறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் மொழிகளாக உள்ளன. (ப.77)” என மு. வரதராசன் அவர்கள் வள்ளுவரின் அரசியல் தொலைநோக்குப் பார்வையை குறிப்பிடுகிறார்.




## திருக்குறளில் பொருளியல் கருத்துக்கள்

மனித வாழ்வோட்டத்தில் 'பொருள்' இன்றியமையாததும் தவிர்க்கமுடியாததுமான ஒன்றாகும். வாழ்க்கையைப் பொருளுள்ளதாக மாற்றுவது பொருளே ஆகும். ஒவ்வொரு தனி மனிதனையும் வலுப்படுத்தி மனத்தில் வலுவாக நம்பிக்கை கொள்ள வைப்பது பொருள் ஆகும். திருக்குறள் உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கான வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்துள்ளது. குறிப்பாக மனிதன் பொருளீட்டி எவ்வாறு வாழ வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

திருக்குறளில் பொருளின் தன்மையும் பொருளீட்டும் முறைகளும் அவற்றைத் திட்டமிட்டுச் செலவு செய்யும் முறைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் பொருளியல் கருத்துகள் பெரும்பாலும் பொருட்பாலில் இடம் பெறுகின்றன. இக்கருத்துகள் **இருபத்தோர் அதிகாரங்களில்** பரவிக் கிடக்கின்றன.

பொருளீட்டல் தொடர்பான முன்னையோர்கள் சிந்தனைகள் தற்கால சமூகத்திற்கு இன்றியமையாதவை. இன்றைய சமுதாயம் பொருளினாலும் பொருளீட்டல் முறைகளினாலும் மனிதநேயம் இழந்த நிலையில் தங்களுக்குள் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்ட மக்கள் கூட்டத்தை கொண்டிருக்கின்றது. பொருள் மனிதனுக்கு தேவையான ஒன்றே. இருப்பினும் அதனை ஈட்டுவதற்கும் பிரயோகிப்பதற்கும் நியமங்கள் உள்ளன. அத்தகைய நியமங்களை இன்றை சமூதாயத்திற்கு எடுத்துக் கூறும் இலக்கியமாக திருக்குறள் உள்ளது. திருக்குறள் காட்டிய வழியல் பொருளை ஈட்டி, அதனைப் பாதுகாத்து, வரவறிந்து செலவு செய்து, நாட்டையும் வீட்டையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். குறளின் பொருளியல்ச் சிந்தனை எக்காலத்திற்கும் பொருந்தும் பொருளியல்ச் சட்டமாக அமைந்திருக்கின்றது.

**திருக்குறளில் பொருளியல்**

திருவள்ளுவர் பொருளின் தன்மை, பொருளீட்டும் முறை, பொருளை செலவு செய்யும் முறை, அனைத்து தரப்பினருக்கும் பொருளின் அவசியம், பொருளின் பயன் என்பன தொடர்பாக கூறியுள்ளார். திருவள்ளுவரின் பொருளியல் தொடர்பான சிந்தனைகள் மேற்கத்தைய பொருளியற் சிந்தனையாளர்களுடன் ஒன்றிச் செல்கின்றதையும் அவதானிக்க முடிகின்றது. வள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள் **பிளேட்டோ, அரிஸ்டாட்டில்** போன்ற பண்டைய கிரேக்க சிந்தனையாளர்களின் கருத்துகளோடும், **ஆதம் ஸ்மித்** போன்ற நவீன காலப் பொருளாதார அறிஞர்களின் ஒப்பிட்டு நோக்கக் கூடியது

வள்ளுவரின் பொருளியல் கொள்கைகளோடு ஓரளவு ஒட்டி நிற்பவர் ஆதம் ஸ்மித்தே ஆகும். அடிப்படைக் கருத்துகளில் ,இருவருக்கும் பற்பல ஒற்றுமை காணப்படுகின்றது. முன்னாளில் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் பொருளியல் அடிப்படையில் வகுப்பு வேற்றுமை ஓங்கியிருந்தது, பூசல்களும் நிறைந்திருந்தன. ஆதம் ஸ்மித்து பொருளியல் அடிமைத் தளையினின்றும் மக்களை விடுவிக்கப் பாடுபட்டார் பெருவாரியான, மக்களின் உழைப்பையும் தொழிலார்வத்தையும் தூண்டித் தழைக்கச் செய்தார் அதன் மூலம் தொழிற் புரட்சிக்கு அடிகோலினார். வள்ளுவரும் மக்களிடையே வேற்றுமை எழுதலை நீக்க முனைந்தார் பொருளியல் விடுதலையைப் போதனைசெய்தார். தொழிலுலகில் சாதியும், வகுப்பும் ஒருவனைக் கட்டுப்படுத்தா என்றார். விரும்பிய தொழிலை மேற்கொள்ள வழிவகுத்தார். பிறப்பால் மக்கள் அனைவரும் ஒரு நிகரே என்ற கொள்கையை வள்ளுவரைப் போன்றே ஆதம் ஸ்மித்தும் வற்புறுத்தினார். கல்வியாலும் சூழ்நிலையாலுமே வேற்றுமை மக்களிடையே விளையும் என இருவரும் கூறினர்.

அரசியலும் பொருளியலும் இசைந்து செல்லவேண்டும் அது மக்களுக்கும் அரசுக்கும் நல்லுறவை நிலைநாட்டும் அறம் பேணி, நலம் வளர்க்கும் – என்பன ஒருவரின் கருத்தும். இருவருமே, அறம் வழுவாப் பொருளியலை விரும்பினர்...ஆதம் ஸ்மித்து “அறச் சிந்தனைக் கோட்பாடுகள்” என்ற நூலில் அறத்தை அடித்தளமாக அமைத்தார். அதன் மீதே, ”தேசங்களின் செல்வம்” என்ற பொருளியல் மாளிகையை எழுப்பினார். வள்ளுவரும் முதலில் அறத்துப்பாலை விளக்கினார். அடுத்தே பொருட்பாலை விரிக்கலானார்.

மேற்கத்தைய சிந்தனையாளர்களின் கோட்பாடுகள் திருவள்ளுவரின் பொருளியற் சிந்தனைகளுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன.

பொருளின் இயல்பு பொருள் மனிதனுக்கு மதிப்பைத் தருகின்றது. சமுதாயத்தில் பொருள் படைத்த மனிதர்களையே மதிக்கின்றனர். பொருள் இல்லாதவர்களை யாரும் மதிப்பது இல்லை. பொருள் சேர்ந்தாரை உயர்வடையச் செய்கின்றது. ஒன்றுமே இல்லாத மனிதர்களையும் ஒரு பொருட்டாக மதிக்கின்ற அளவிற்கு உயர்த்தும் தன்மை கொண்டதாக விளங்குகின்றது. பொருளின் இத்தகைய தன்மையினை,

**"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**

**பொருளல்லது இல்லை பொருள்" (குறள்:751)**

என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது. பொருள் இருப்பவனையே இவ்வுலகம் மதிக்கும். பொருள்வளம் இல்லாதவனை, அவன் நல்ல பண்புள்ளவனாக இருந்தாலும் அவனை அனைவரும் இழிவாக நடத்துவர். அதனால் பொருளின் அருமை அறிந்து அனைவரும் நல்வழியில் பொருளீட்ட வேண்டும் என்பதை,

**"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**

**எல்லாரும் செய்வர் சிறப்பு"**(குறள்:**752)**

எனவே, மனிதனை சமுதாயத்தில் அந்தஸ்த்தும், கௌரவமும் உள்ள ஒருவனாக மாற்றும் ஒன்றே பொருள் என பொருளின் இயல்பினை வரையறுக்கின்றார் வள்ளுவர்.

**பொருளீட்டும் முறை**

நேர்மையான வழிகளன்றி தீயவழிகளில் ஒரு போதும் செல்வத்தைச் சேர்த்தல் கூடாது. அதனைக் கட்டாயம் நீக்கிவிட வேண்டும் என்பது பொருளீட்டலில் திருக்குறள் கூறும் முதன்மையான கருத்து. அறம் பொருள் இன்பம் என்னும் விழுமியங்களின் வரிசை முறையில் திருவள்ளுவர் பொருளுக்குத் தந்திருக்கும் இடம் கவனிக்கத்தக்கது. பொருள் இருந்தால் மட்டுமே ஒருவர் அறம் செய்ய முடியும் இன்பம் நுகரவும் கூடும். எனவே, பொருளுக்குப் திருவள்ளுவர் நடு இடத்தினையும் அறத்திற்கும் இன்பத்திற்கும் இடைப்பட்ட மைய இடத்தினையும் அளித்துள்ளனர். கருணையுடனும், அன்புடனும் நேர்வழியில் பொருளைச் சேர்த்தல் வேண்டும். அவ்வாறு வரக்கூடிய செல்வம் மேலும் மேலும் வளரும். கருணைக்கும், அன்புக்கும் எதிராக இரக்கமின்றிப் பிறரை வருத்திச் சேர்க்கும் செல்வம் நிலைக்காது அழிந்துவிடும். அதோடுமட்டுமல்லாமல் அது வளர்வதைப் போன்று வளர்ந்து இல்லாமலாகிவிடும். பெருங்கேட்டினைக் கொணர்ந்துவிடும் தன்மை கொண்டது. அதனால் அறவழியில் வராத பொருளை விரும்பாது, அப்பொருளால் தீமையே வரும் என்று எண்ணி அதனை வேண்டாம் என்று ஒதுக்கிவிட வேண்டும். இத்தகைய பொருளீட்டும் முறையினை,

**"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**

**புல்லார் புரள விடல்" (குறள்:755)**

என்ற குறள் வழி வள்ளுவர் எடுத்தியம்புகிறார். அன்பின் வழியாலும், அருளின் வழியாலும் ஒரு மனிதன் சேர்த்து வைக்காத பொருளானது அம்மனிதனுக்கும் அவன் வழித்தோன்றலுக்கும் தீராத துன்பத்தைத் தரும்.

நேர்வழியில் பொருளீட்ட வேண்டும். அதுவே அறத்தையும் இன்பத்தையும் தரும். பிறரை வருத்தாமல் வரும் பொருளால்தான் இன்பம் கிடைக்கும். அதுவும் நிலைத்த இன்பமாக இருக்கும். நல்வழியில் சேர்த்த பொருளால் மட்டும்தான் நல்ல அறச் சிந்தனைகள் உருவாகும்.

அதனால் அறந்தழைக்கும். அதனால் நேரிய வழியில் பொருளீட்ட வேண்டும் என்ற அறநெறியை,

**"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**

**தீதின்றி வந்த பொருள்" (குறள்:754)**

என்ற குறள் நமக்கு எடுத்துரைக்கின்றது. நேர்வழியில் வந்த பொருளானது அன்பினையும், அறத்தினையும் வளர்க்கின்றது. தீய வழியில் சேர்க்கப்பட்ட பொருள் அன்பினையும், அறத்தினையும் இழக்கச் செய்கின்றது.

"பெருமை தரும் செல்வத்தை எவ்வாற்றானும் ஈட்டுக என்று வள்ளுவர் கூறவில்லை. பொருளைச் சேர்ப்பதற்குப் பொருந்தும் நெறிகளை வகுத்தார். பொருள், நல்வாழ்வுக்குக் கருவியேயன்றி அதுவே வாழ்க்கைப் பயனாகாது. வள்ளுவர் கூற்றின் படி அறநெறி வழுவாது பொருளீட்டுதல் வேண்டும்... வள்ளுவர் பொருள் ஈட்டலை வலியுறுத்தினாரேயன்றிப் பொருள் குவித்தலை விரும்பினாரில்லை. நல்வாழ்வுக்குத் துணையாகும் பொருளை வாழ்க்கையின் முடிந்த குறிக்கோளாகக் கொள்ளுதல் தவறு என்கிறார்"

வள்ளுவருக்கும் இன்றைய பொருளியல் துறையின் தந்தை எனப் போற்றப்படும் ஆதம் சிமித்துக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது, 'பிறப்பால் மக்கள் யாவரும் ஒரு நிகரே கல்வியாலும் சூழ்நிலையாலுமே மக்கள் இடையே வேற்றுமை விளையும். அரசியலும் பொருளியலும் இசைந்து செல்ல வேண்டும். அது மக்களுக்கும் அரசுக்கும் இடையே நல்லுறவை நிலைநாட்டும். அறம் வழுவாப் பொருளியலே வேண்டத்தக்கது' என்பன இருவருக்கும் இடையே உள்ள ஒத்த சிந்தனைகள் ஆகும்.

GROUP I & II PRELIMS CLASSES

CLASSROOM / ONLINE /CLASSES

LIMITED ADMISSION

FOR ADMISSION 9952521550

**அரசுபொருளைப் பெறக் கூடிய வழிமுறைகள்**

அரசுகள் வருவாய் பெறக்கூடிய வழிமுறைகள் மூன்று எனப் பழங்காலத்து நூல்கள் தெரிவிக்கின்றன. அவையாவன,

- மக்களிடமிருந்து பெறும் வரி
- வாணிகப் பொருட்களுக்கான சுங்கவரி
- சிற்றரசர்களிடமிருந்து பெறும் திறை

இவ்வடிப்படையில் அரசுகள் வருவாய் பெற்றுவந்தன. மக்களை நீதி முறை செய்து காப்பதற்காகவும் பகைவரிடமிருந்து நாட்டைக் காப்பதற்காகவும் மக்கள் தங்கள் வருவாயில் இருந்து ஒரு பங்கையும், உழவர்கள் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கையும் அரசுக்கு வரியாகச் செலுத்தி வந்தார்கள். **மன்னருக்கு மக்கள் வரி செலுத்துகின்ற முறை இருந்தது என்பதை "உறுபொருளும்" என்ற சொல்** மூலம் அறிய முடிகிறது.

**"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்**

**தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள் 756)**

என்ற இக்குறள் மூலம் அரசு ஏற்றுமதி இறக்குமதி வரிகளோடு உள்நாட்டுச் சுங்க வரிகள் மூலமும் வருவாய் சேகரித்து வந்தது.

அரசுகள் பெற்றுவந்த மூன்றாவது வருவாய் முறை திறையாகும். பகை நாட்டார் இடத்தும், சிற்றரசர்களிடமிருந்தும் அரசு வருவாய்களைச் சேகரித்து வந்தது. தனி மனிதனைப் போன்று அரசிற்கும் பொருள் வாழ்வு உண்டு. அரசும் பொருளை ஈட்ட வேண்டும் பொது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அரசு நடத்தும் பொருள் வாழ்வு மக்கள் எல்லோருக்கும் உரியது. அதனைப் பொருளியலில் **பொதுநிதி'(Public Finance)** என்பர். பொது நிதியில் அரசின் வருவாய்க்கான வழிகள், செலவினங்கள், அவற்றை ஈடுகட்டுவதற்கான நெறிமுறைகள் ஆகியன அடங்கும்.

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்லது அரசு" (குறள் 385)**

என வள்ளுவர் குறிப்பிடுவது பொதுநிதியின் பாற்படும் எனலாம். 'பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும்,ஈட்டிய பொருள்களை ஓரிடத்துச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை அறம் பொருள் இன்ப வழிகளில் வகுத்துச் செலவு செய்தலும் வல்லதே நல்லரசாகும்' என்பது வள்ளுவர் கருத்து. ஓர் அரசானது பொருள் வரும் வழிகளை மேன்மேலும் உருவாக்குதலும், வந்தவற்றைத் தொகுத்தலும், தொகுத்தவற்றைப் பிறர் கொள்ளாமல் காத்தலும், காத்தவற்றை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுக் கொடுத்துத் தன் கடமையைச் செய்யவல்லது என்று கூறுகிறார். அரசு இம்முறையில் செயற்பட்டால்தான் நாடு தன்னிறைவு அடையும், தன்னிறைவு பெற்றால்தான் உலக நாடுகளுடன் போட்டிபோட முடியும். போட்டிபோட வேண்டும் எனில் நாடு செல்வ நிலையில் செழித்து இருக்க வேண்டும்.

அரசு எப்போதும் செல்வ நிலையில் வலிமை பெற்றுத் திகழ வேண்டும். செல்வ நிலையில் வலிமை பெற்றால்தான் உலக நாடுகள் மத்தியில் நிலைத்திருக்க முடியும். இன்று படை பலத்திலும் செல்வ நிலையிலும் வலிமை பெற்ற நாடுகள் தாம் வல்லரசுகளாய் மதிக்கப்படுகின்றன. வல்லரசு ஆவதற்கு நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்கு முதல்படியே செல்வம்தான். அதனால்தான் வள்ளுவமும் செல்வத்தை வலியுறுத்துகிறது,

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்

**எண்ணிய தேயத்துச் சென்று" (குறள் 753)**

**என்ற குறளின் கருத்து நோக்கத்தக்கது.**

பொருள் வளம் நிறைந்த நாடே முழுமையான நாடு வள்ளுவரின் நோக்கில் 'தன்னிறைவு படைத்த வள நாடே உரிமை நாடு பிற நாட்டை எதிர்நோக்கும் நாடு, நாடு அன்று!' இதனை,


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

**“நாடுஎன்ப நாடா வளத்தன்நாடு அல்ல**

**நாட வளந்தரு நாடு” (குறள்:739)**

என்கிறார் வள்ளுவர். இன்றைய பொருளியலும் **'தன்னிறைவு பெற்ற நாடே வலிமை** பொருந்தியது' எனக் கருதுகின்றது.

**118. “Incomings may be scant; but yet, no failure there,**
**If in expenditure you rightly learn to spare”.**

**What do you infer from the above ?**

(A) Work hard to increase your income.

(B) Though income is limited, one can live without any misery, if the outflow is carefully managed.

(C) Completely restrict the outflow regardless of your income.

(D) Increase both the income and the outflow.

68 of 120

**“ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகா றகலாக் கடை”**

**-மேற்காணும் குறளில் இருந்து நீவிர் அறிவது யாது?**

(A) வரவைப் பெருக்குவதற்குக் கடினமாக உழைக்க வேண்டும்.

(B) செலவைக் கவனமாக மேலாண்மை செய்தால் வரவு குறைவானாலும் எவ்விதத் துன்பமுமின்றி வாழ முடியும்.

(C) வரவு எத்தகையதாயினும் செலவின் பெருக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்துக.

(D) வரவு, செலவு இரண்டையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

**பொருளைச் செலவு செய்யும் முறை**

பொருளைச் செலவு செய்வதிலும் மிக அவதானமாக இருத்தல் வேண்டும். வரம்புமீறிபொருளைச் செலவு செய்தால் அதனால் செல்வம் அழிந்து வறுமையுற நேரிடும். தன்னுடைய வருவாயை அறிந்து அரசனோ, குடிமக்களோ செலவு செய்தல் வேண்டும். வரவுக்கு மீறி செலவு செய்தால்


Ph. 9952521550 / 044-48601550, Venue: No, 172, Tirugnanamsambandar Street, Tirumangalam, Anna Nagar (W), Chennai 40.
Ph. 7338834555, Venue: No. 93, 2nd Floor, VOC Ground Opp, Zenith Opticals Upstairs, Palayamkottai-627002

நாடும் வீடும் அழிவைச் சந்திக்க நேரிடும். அதனால் வரவறிந்து செலவு செய்து வாழ்க்கையை நடத்துதல் வேண்டும். இதனை,

**“ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை**

**போகாறு அகலாக் கடை”(478)**

என்ற திருக்குறள் எடுத்துரைக்கின்றது. பொருள் பெறப்படும் வழி சிறியதாக இருக்கும் போதுசெலவு செய்யும் வழி அகலமாக இருத்தல் கூடாது. **அதாவது செலவினை அதிகம் செய்தல் கூடாது. அவ்வாறு இருந்தால் வாழ்வில் எந்தவிதமான துன்பமும் வராது.** வருவாய்க்குள் செலவு இருத்தல் வேண்டும் அது அனைத்து வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமையும் என்று இத்திருக்குறள் நமக்குப் பொருளைச் செலவு செய்யும் முறையினை தெளிவுறுத்துகின்றது. இது எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் எம்மக்களுக்கும் பொருந்தும் நெறியாகும்.

நாடு முன்னேற வேண்டுமானால் நாட்டை ஆள்வோர் திட்டமிட்டுப் பொருளீட்டிச் செலவு செய்தல் வேண்டும். பொருள் வருவாய் வழி அறிந்து அப்பொருளை ஈட்டுவதற்கு உரிய திட்டத்தை வகுத்தலும், பின்னர் திட்டத்தின்படி பொருளை ஈட்டுவதும்,ஈட்டிய பொருளைப் பெருக்கி வளர்த்தலும் அதனைக் காத்தலும் ஆகிய பல்வேறு திறமைகளை உடையவனாக அரசன் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் அரசனால் நாடும், மக்களும் அளப்பறிய பயன் பெறுவர். இத்தகைய அரிய பொருளியல்ச் சிந்தனையை,

**“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்ல தரசு**

(குறள்: 385) என்று வள்ளுவர் மொழிகின்றார். இச்சிந்தனை திட்டமிடல் (Planning& Management)செயலை அடிப்படையாகக் கொண்டமைகின்றது.

**மக்கள் நலப் பொருளாதாரத்தின் அடிப்படை**

பொருளை அற வழியில் நேரிய முறையில் ஈட்டுமாறு அறிவுறுத்திய வள்ளுவர், பொருள் தேவைக்கு மேல் இருந்தால் அதனைப் **'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' (322)** வேண்டும் என்கிறார். அதே வேளையில், **வரன்முறை அறிந்து ஈகையில் ஈடுபட வேண்டும்** என்றும் அவர் வழிகாட்டுகின்றார் அதுவே **‘பொருள்தனைப் போற்றி வழங்கும் நெறி' (477)** என்றும் சுட்டிக்காட்டுகின்றார். 'வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன், அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அ.'.துஒருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி"(குறள்:226)**

இன்று அதிகமாகப் பேசப்படும் மக்கள் நலப் பொருளாதாரத்தின் (Welfare Economics) அடிப்படையினைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

**வரவுக்கு ஏற்ற செலவு**

மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்னும் பொருள் பொதிந்த தொடரால் சுட்டும் அவர், சிறந்த வாழ்க்கைத் துணையின் இயல்பினையும் எடுத்துரைத்துள்ளார்.

**"ஆகாறு அளவிட்டிது ஆயினும் கேடுஇல்லை**

**போகாறு அகலாக் கடை.” (குறள்: 478)**

இக் குறட்பாவில் இடம்பெற்றுள்ள 'ஆகாறு'- பொருள் வரும் வழி (வருவாய்), போகாறு'- பொருள் போகும் வழி (செலவு) என்னும் சொல்லாட்சிகள் குறிப்பிடத்-தக்கவை. 'வரவுக்கு ஏற்ற செலவு' என்னும் பொருளியல் சிந்தனையை இங்கே வெளிப்படுத்தியுள்ளார் வள்ளுவர்.

**பொருளின் பயன்**

நாம் தேடிய செல்வத்தைப் பிறருக்கு ஈத்துவக்கவேண்டும். ஈத்துவக்கும் இன்பமே வாழ்வின் பெரும் பேரின்பமாகும் என்கிறார் வள்ளுவர். அறவழியில் தேடிச் சேர்த்த பொருள், அனைவருக்கும் பரவலாக்கப்பட வேண்டும். பொருள் ஓரிடத்தில் குவிவதால் மட்டும் பலன் ஏற்படுவதில்லை . தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் எனப் பொருளை அனைவரிடத்திலும் சென்று சேரும் வகையில் பரவலாக்க வேண்டும். முறையாக நாம் சேர்த்துவைத்த பொருள் யாவும் நம்மைச் சார்ந்தவர்க்கும் நம்மைச் சார்ந்த சமுதாயத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்பதை,

**“தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**

**வேளாண்மை செய்தற் பொருட்டு” (குறள் 212)**

என்று திருக்குறள் தெளிவுறுத்துகிறது.

பொருளீட்டல் தொடர்பான முன்னையோர்கள் சிந்தனைகள் தற்கால சமூகத்திற்கு இன்றியமையாதவை. இன்றைய சமுதாயம் பொருளினாலும் பொருளீட்டல் முறைகளினாலும் மனிதநேயம் இழந்த நிலையில் தங்களுக்குள் முரண்பாடுகளை வளர்த்துக் கொண்ட மக்கள் கூட்டத்தை கொண்டிருக்கின்றது. பொருள் மனிதனுக்கு தேவையான ஒன்றே. இருப்பினும் அதனை ஈட்டுவதற்கும் பிரயோகிப்பதற்கும் நியமங்கள் உள்ளன. அத்தகைய நியமங்களை இன்றை சமூதாயத்திற்கு எடுத்துக் கூறும் இலக்கியமாக திருக்குறள் உள்ளது. திருக்குறள் காட்டிய வழியல் பொருளை ஈட்டி, அதனைப் பாதுகாத்து, வரவறிந்து செலவு செய்து, நாட்டையும் வீட்டையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். குறளின் பொருளியல்ச் சிந்தனை எக்காலத்திற்கும் பொருந்தும் பொருளியல்ச் சட்டமாக அமைந்திருக்கின்றது.

IYACHAMY ACADEMY,
NO 172,
TIRUGNANASAMBANDAR STREET,
TIRUVALLISWARAR NAGAR, TIRUMANGALAM,
ANNA NAGAR WEST, CHENNAI, 600040
9952521550, 044-48601550
WWW.IYACHAMY.COM

IYACHAMY ACADEMY
NO, 92 , IIND FLOOR
OPPOSITE TO VOC GROUND
JENITH OPTICALS UPSTAIRS,
PALAYMKOTTAI
TIRUNELVELI
7338834555